**தி.ஐ. மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, அம்பத்தூர்**

**அரையாண்டுத்தேர்வு -2017** மதிப்பெண் :60

பதிவு எண்: …………… நேரம் : 2..30 மணி

**பகுதி-அ**

**1. பொருள் தருக: (2 மட்டும்)** **(2x1=2 )**

1.வனப்பு -**அழகு---1** 2. கணக்காயர் -**ஆசிரியர்** ---13.வித்து - **விதை---1**

**2. பிரித்து எழுதுக: (2 மட்டும் )** **( 2x1=2)**

1.விலையில்லா -**விலை+இல்லா** --1 2. செவ்விதழ்-**செம்மை+தமிழ்-1**
3.பருவப்பெண் -**பருவம்+பெண்--1**

**( 3 x1=3)**

3. **கோடிட்ட இடத்தை நிரப்புக: (மூன்று)**

1. பாவலர்மணி எனப் புகழப்படுபவர் **வாணிதாசன்----1**
2. கலம்பகம் **பதினெட்டு** உறுப்புகளைக் கொண்டது.----1 எண் எனில்1/2
3. வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின்மீது **சீற்றம்** கொண்டானாம்.---1
4. சுக்கு, மிளகு திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் **திரிகடுகம்---1**
5. இறைவன் **வந்திக்** கிழவிக்காக மண் சுமந்தார்.---1

**4. பொருத்துக:** **(4x1=4)**

| | | | |
|---|---|---|---|
| 1. அறுவை வீதி | - | பொற்கடைவீதி | ( **3** ) |
| 2.கூலவீதி | _ | மன்னவர் வாழும் வீதி | (**4** ) |
| 3.பொன்வீதி | _ | ஆடைகள் விற்கும் கடைவீதி | (**1** ) |
| 4.மன்னவர் வீதி | - | தானியக்கடைவீதி | ( **2** ) |

**5. சரியான விடையைத் தேர்வு செய்க :** **(4x1=4)**

1. தமிழகத்தின் ‘வேர்ட்ஸ்வொர்த்’ எனப் புகழப்படுபவர்
   1) கம்பதாசன் 2) பாரதிதாசன் 3) **வாணிதாசன்**

2. அம்மானை என்பது
   1) கபடி 2) நொண்டி 3) **ஒரு வகை காய் விளையாட்டு**

3. ‘திரைக்கவித் திலகம்’எனப் போற்றப்படுபவர்
   1) **மருதகாசி** 2). வாணிதாசன் 3). சுவாமிநாத தேசிகர்

4. நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தவர்
   1) சிவாஜி 2.**பாண்டித்துறைத்தேவ**ர் 3.திருமலை நாயக்கர்

## பகுதி-ஆ

6. **அடிமாறாமல் எழுதுக :** (1x4 =4 )

1.'வளர்ந்துவிட்ட' எனத் தொடங்கி 'சொத்தம்மா' என முடியும் வரையுள்ள ஏர்முனைப் பாடல்.

**வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா ? -தலை**
**வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்பக்கமா -இது**
**வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும்ஆசை முத்தமா ? -என்**
**மனைக்கு வரக்காத் திருக்கும் நீஎன் சொத்தம்மா**

**(மூன்று பிழைகள் இருப்பின் ஙு மதிப்பெண் குறைக்கவும்.)**

## பகுதி-இ

7. **பின்வரும் செய்யுள் குறுவினாக்களுக்கு விடை தருக .( 3 மட்டும் )** ( 3x2=6)

1. கல்வி கற்பிப்போர் எத்தகையவர்?
   **கண்கொடுப்பவர்/ஆசிரியர்-------2**
2. தூய்மை உடையாரின் செயல்கள் யாவை?.
   **நீராடிய பின் உண்ணுதல், பொய்ச்சாட்சி சொல்லாமல் இருத்தல்,அறிவு ஒழுக்கங்களில் குன்றாது இருத்தல்-----ஏதேனும் இரண்டு கருத்துக்கள் இருப்பின் ------2**
3. என்பணிந்த தென்கமலை ஈசனார் யார்?
   **சிவபெருமான்/ஈசன்/சிவன்/------2**
4. அம்மானை -விளக்குக.
   **ஒரு வகை காய் விளையாட்டு.இது பெண்கள் விளையாடுவதற்கு உரியது. உரையாடல் விளையாட்டு. (ஏதேனும் இரண்டு கருத்துக்கள் இருப்பின்---2**

8. **பின்வரும் செய்யுள் சிறுவினாக்களுக்கு விடை தருக. (2 மட்டும் )** ( 2x3=6 )

1. முருகப்பெருமானின் சிறப்புகளை எழுதுக .
   **ஒளிபொருந்திய நெடிய வேலை ஏந்திய வீரன். உலக உயிர்களைப் படைத்தவனான பிரமன்,நான்கு மறைகளை அறிவானோ ? இவற்ரை அறிந்தா நான்முகனை சிறையில் இட்டனன்.** 3 x1=3
2. பள்ளிக்குச் செல்லும் ஒழுங்கு குறித்து வாணிதாசன் குறிப்பிடுவன யாவை?
   **குளித்து, தலைசீவி,நல்லதுணிகளை அணிந்து,பாட நூல்களை ஏந்தி,விரைந்து செல்லல்.ஒற்றுமையாக சிரித்துப் பழகி,ஆசிரியர் சொல் கேட்டு நடக்க வேண்டும்.** 3 x1=3

3. இறைவன் மண் சுமந்த வரலாற்றை எழுதுக.
   **வைகையில் வெள்ளம் பெருகுதல்- அரசரின் ஆணை- ஆண்மகன் செல்லுதல்- வந்திக் கிளவிக்கு ஆள் இல்லா சூழல்- இறைவன் விளையாடுதல் -அரசரின் அடி- இறைவன் மறைதல்.** 3 x1=3

## பகுதி-ஈ

09. **பின்வரும் உரைநடை குறுவினாக்களுக்கு விடை தருக .( 3 மட்டும் ) ( 3x2=6)**

1. மதன்மோகன் மாளவியாவின் ஈர்ப்பான இலக்கிய நடைக்குக் காரணம் என்ன?

   **அவரது தாய் மொழிப்பேச்சு -------2**

2. முச்சங்கங்கள் எவை?

   **முதற்சங்கம்,இடைச்சங்கம், கடைச்சங்கம்-----2**

3. கைத்தறி நெசவு நடைபெறும் ஊர்கள் நான்கனை எழுதுக.

   **காஞ்சி, ஆரணி, மதுரை, கோவை,ஈரோடு, ......** 4 x1/2=2

4 . தமிழகத்தின் சிறப்பை உணர்த்துக.

**சோழநாடு-சோறுடைத்து, சேரநாடு- வேழமுடைத்து, பாண்டியநாடு-முத்துடைத்து. தொண்டைநாடு சான்றோர் உடைத்து.** 4 x1/2=2

10. **பின்வரும் உரைநடை சிறுவினாக்களுக்கு விடை தருக. (2 மட்டும் ) ( 2x3=6 )**

1. பள்ளி எவ்வாறு அமைய வேண்டுமென்று காந்தியடிகள் உரைக்கின்றார் ?

**பள்ளிக்கூடம் வீட்டைப்போன்று இருத்தல் வேண்டும்.வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும்,பள்ளியில் தோன்றும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும்.** 3 x1=3

2. மதுரையின் பெயர் காரணங்களுள் ஏதேனும் இரண்டு கூறுக.

   **சரியான விடை இருப்பின் மதிப்பெண் அளிக்கவும்.**

3. பட்டுநூல் எவ்வாறு உருவாகிறது?

**பட்டுப்புழு வளர்ப்பு-திரவத்தால் உண்டாகும் கூடு= கால வரையறை -உண்டாகும் நூல் -பட்டுஆடை** 3 x1=3

## பகுதி-உ

11. **பின்வரும் நெடுவினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடை தருக : ( 1x5=5 )**

1. உழவரின் செயல்களாக கவிஞர் மருதகாசிகூறுவனவற்றைத் தொகுக்க.

**உழவுத்தொழில் சிறப்பு-உழைப்பால் நாடு நலம் பெறும் சிறப்பு-உழவரின் உழைப்பு- நெற்கதிர் வளர்ந்த விதம்- உழவர் வியர்வைக்குக் கிடைத்த பலன்**

2. திருமலை நாயக்கரின் திருப்பணிகள் குறித்து எழுதுக.

**கோவிலுக்குத் திருப்பணிகள் பல செய்தார். கலைநயமிக்க மதுரையை கவினுற அமைத்தார். மகால் கட்டினார். அதில் ஓவியங்களை வரைந்தார்.இது போன்று இன்னபிற. ( ஐந்து கருத்துக்கள் )--------5**

## பகுதி-ஊ

12. **பின்வரும் மொழிப்பயிற்சிகளை நிறைவு செய்க.** **(3x1=3)**

**1. உரிய தமிழ் எண்களை தேர்வு செய்க.**

1.ஏழு என்பதன் தமிழ் எண்
அ) க ஆ) **எ** இ) உ-------1

**2. கீழுள்ள சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொல்லைக் கண்டறிந்து எழுதுக.**

1. தேசம் - **உலகம்----1**
2. சேமம் - **நலம்---1**

**13.** **( 2x2=4 )**

**பின்வரும் இலக்கண வினாக்களுக்கு விடை தருக. (இரண்டு)**

1. காரணப் பெயர் என்றால் என்ன ? சான்று தருக.
   **காரணம் கருதி இடப்பட்ட பெயர் - வளையல், நாற்காலி**
2. சினைப்பெயர்கள் நான்கனை எழுதுக.
   **கிளை, பூ, காய், தண்டு, இது போன்று பிற**
3. பெயரெச்சம் என்றால் என்ன ?சான்று தருக.
   **பெயரைக் கொண்டு முடியும் எச்சம். கண்ணன்**

**விளக்கம் ---1 சான்று---1**

## பகுதி-எ

**14.** **பின்வரும் துணைப்பாட வினாக்களுக்கு விடையளிக்க .( 1 மட்டும் )** **(1x5=5 )**

1. காளியப்பனை ஊர் மக்கள் ஏன் வெறுத்தனர்?
   **காளியப்பன் ஒரு முரடன். பொது அறிவே கிடையாது.எல்லாரிடமும் வம்புச் சண்டைக்குச் செல்வது.உதைப்பது. இது தான் வழக்கமாக இருந்தது.அதனால் ஊர் மக்கள் வெறுத்தனர். (5 x1=5)**
2. ‘நிலைத்த செல்வம் கல்விச்செல்வம்’-இச்சிறுகதை உணர்த்தும் செய்தியை விவரிகக.
   **கல்வியின் சிறப்பு தொடர்பான கருத்துக்கள் இருப்பின் மதிப்பெண் வழங்கப்படும்.**

**(ஐந்து கருத்துக்கள் )--------5**

**************